**தலைப்பு 110 - நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 யூலை 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த சந்தரப்பங்களிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் அமைச்சின் சொத்துக்கள் அறிக்கையின் பிரகாரம் 2018 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையிலும் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,210,395 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் ஏசீஏ-06 மாதிரியில் கொள்வனவின் கீழ் காண்பிக்கப் | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பில் 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.3 உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் அந்த கணக்கீட்டு குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் அதன் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 791,491,836 ஆன போதிலும், ஏசீஏ-06 மாதிரியில் அந்த பெறுமதியானது ரூபா 388,219,862 ஆன கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிதி நிலைமைக்கூற்றில் நிதியால்லாத சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 403,271,974 இனால் குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சுற்றறிக்கையின் 3.4 உப பிரிவின் பிரகாரம் குறிப்பு இலக்கம் (iii) இன் கீழான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று மற்றும் திறைசேரியினால் வெளியிடப்படும் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்று ஆகியன ஒன்றுக்கொன்று இணங்க வேண்டிய போதிலும், அவை இணங்காத 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | இணங்காத சந்தர்ப்பங்களை தீர்ப்பனவு செய்து நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | அமைச்சினால் இனங்காணப்பட்டுள்ள உள்ளபடியான பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு (iii) மாதிரிக்கு பெறுமதிகள் உள்ளடக்கப் பட்டுள்ளதுடன் ஏனைய திணைக்களங்களால் கிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக 110-01-03-1409 செலவின விடயத்திற்கு பொறுப்புக்கள் மற்றம் கடப்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கமைய திறைசேரி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் மற்றும் குறிப்பு (iii) பெறுமதி ஆகியவற்றுக்கிடையே வேறுபாடொன்று காண்பிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பணி நீக்கத்திற்கு உள்ளாக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களின் கடன் மீதியில் கூட்டுத்தொகையான ரூபா 323,197 தொகை 06 முதல் 11 வருடங்கள் வரையான காலமாக அறவிடப்படாது காணப்பட்டது. | பிணையாளர்களிட மேனும் அறவிடப்பட வேண்டும். | ரூபா 162,215 ஆன கடன் மீதியை அறவிடுவதற்குரிய சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்குரிய தகவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏனைய கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளது. |
| (ஆ) சேவையை கைவிட்டுச் சென்ற 05 உத்தியோகத்தர்களின் ரூபா 318,425 ஆன கடன் மீதி 03 முதல் 21 வருடங்கள் வரையான காலவீச்சில் அறவிடப்படாதிருந்தது. | துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 238,395 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு தேவையான சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்குரிய தகவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏனைய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை நாள்தோறும் பரிசோதிக்கக் கூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேட்டில் அந்த பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், பொறுப்புக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்டுள்ள விடயங்களை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் பொறுப்புக்கள் பேரேடொன்றினை நாளதுவரையாக பேணிச செல்ல நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 1.6.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான வகையில் திட்டவட்டமான காலப்பகுதியினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 3.5 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய பழமையான கோவைகளை பரீட்சித்து விடயங்களை ஆராய்வு செய்ததன் பின்னர் பதில்கள் தயாரிக்கப்பட வெண்டியமையால் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கும் போது காலதாமதமொன்று ஏற்பட்டுள்ளது. எனினும், எதிர்காலத்தில் உரிய திகதியில் கணக்காய்வு ஐயவினாவிற்கான பதில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) நிதிப்பிரமாணம் 396 | மீளாய்வாண்டின் இறுதியில் வெளியிடப்பட்ட எனினும் காலாவதியான ரூபா 164,136 பெறுமதியான 17 | நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட | இலக்கம் 137828 மற்றும் 150444 கொண்ட காசோலைகளுக்காக உரியதரப்பினரால் நட்டக் காப்பீட்டு கடிதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காசோலைகள் தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அவற்றுள் 2019 யூலை அளவில் தொலைந்து போயிருந்த ரூபா 3,510 பெறுமதியான காசோலைகள் தொடர்பிலும் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வேண்டும். | முன்வைக்கப் பட்டுள்ளதுடன், அந்த காசோலைகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டாமென வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இலக்கம் 161644 கொண்ட காசோலை தொலைந்து போயுள்ளமையால் நட்ட காப்பீட்டு கடிதமொன்றினை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனைய அனைத்து காசோலைகளம் இன்றளவில் விளைவற்றுக் காணப்பட்டதுள்ளது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களில் 2019 யூலை மாதமளவில் தொடர்ந்தும் எஞ்சியுள்ள ரூபா 471,246 ஆன வைப்பு மீதிகள் தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வைப்புக் கணக்கு இலக்கம் 6000-0-0-2-0-138 மற்றும் 6000-0-0-16-0-86 கொண்ட ரூபா 37,890 ஆன வைப்பு பணம் இன்றளவில் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. ஏனைய வைப்புப் பணங்கள் உரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 செலவின விடயங்களின் கீழ் 03 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடுகளின் கூட்டுத்தொகையான ரூபா 8,654,521 ஆன தொகை முழுமையாக எஞ்சியிருந்தது. மேலும், ஒரு மூலதன விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 ஆன முழு நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டுமாயின் எதிர்வு கூறப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிகளுக்குரிய காலப்பகுதியினுள் நிறைவேற்றுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வணிகமயப்படுத்தும் சட்டத்தினை அங்கீகரித்து நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் காரணமாக வணிகமயப்படுத்தப்பட்ட நிலையத்தின் செயற்திறன் இல்லாதிருந்தமையின் காரணத்தால் நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதிருக்க நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலமைகள் ஏற்படாதிருக்க பொறுப்புடன் கடமையாற்றப்படுமென குறிப்பிடுகின்றேன். |

### 2.2 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| UNDP - SELAGSI செயற்திட்டத்தின் போதைப் பொருள் நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கமைப்பதற்காக 2016 யூன் 02 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 307,496 ஆன தொகை மற்றும் 2016 நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற கூட்டத் திகதிக்காக | கிடைத்த பணம் உரிய பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்கின்றேன். இந்தப் பணத்தை பயன்படுத்தல் தொடர்பில் மேலும், தேடியறிந்து தேவைப்பாடுகளை இனங்கண்டு மேற்படி |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை தீர்ப்பதற்காக கிடைத்திருந்த ரூபா 1,316,041 தொகையுமாக ரூபா 1,623,537 ஆன தொகையொன்று உரிய பணிகளில் ஈடுபடுத்தப்படாது வைப்புக் கணக்குளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இந்தப் பணத்தை பயனள்ள விதத்தில் பயன்படுத்துவதற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள UNDP செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டவாறு உள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது ஒரு வருடத்திற்கு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவக கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, தற்பொது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி தொடர்பான விபரங்கள், கட்டுநிதி திட்டம், மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. | உள்ளக கணக்காய்வு திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்காய்வாளரால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு உரிய விபரங்கள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவிக்கின்றேன். |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் புதிய அலுவலகக் கட்டிடத்திற்காக வளிச்சீராக்கல் கட்டமைப்பொன்றை | ஆரம்பத் திட்டங்களை தயாரிக்கும் போது | இந்த செயற்திட்டம் தொடர்பில் எழுந்துள்ள தொழில்நுட்ப சிக்கல்களை |

| | | |
|---|---|---|
| பொருத்துவதற்காக 2016 திசெம்பர் 13 ஆந் திகதியளவில் பணிகளை நிறைவு செய்து கையளிப்பதற்காக ரூபா 52.55 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், ரூபா 14.60 மில்லியனான மேலதிக பணி மதிப்பீட்டிற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் இயந்திரப் பொறியியலாளரால் பல்வேறு காரணங்கள் குறிப்பிடப்பட்டு அதற்கு இணங்கியிருக்கவில்லை. இந்த விடயங்களை அடிப்படையாக கொண்டு பெறுகைகள் குழுவில் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. மேலும் 2016 ஆம் ஆண்டின் குறித்த திகதியில் பணி நிறைவு செய்யப்படாத இந்த செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 21.84 மில்லியனான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 6.51 மில்லியனும், 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 17.5 மில்லியனான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 17.43 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சாத்தியவளக் கற்கை யொன்றினை மேற்கொண்டு தேவைப் பாட்டினை இனங்கண்டு உரிய முறையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | தீர்த்து உரிய அங்கீகாரத்திற்காக கேள்வி சபைக்கு போதியளவான தகவல்களை முன்வைக்க முடியாமையின் அடிப்படையில் நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளன. இந்த பணி மிகவும் சிக்கலான தொழில்நுட்ப பிரச்சினையொன்றானமையயால் அதற்கு தொழில்நுட்ப அறிவுரைகளை பெற்றுக்கொள்வதற்காக இதுவரையிலும் குறித்த துறையில் நிபுணத்துவ அறிவுடைய இரண்டாம் தரப்பினர் ஒருவருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை எமக்கு கிடைத்த பின்னர் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சிற்கு சொந்தமாகவுள்ள பத்தரமுல்ல கட்டிடத்தில் அமைந்துள்ள காணி 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மதிப்பீடு | கட்டிடத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | அமைச்சிற்குரிய பத்தரமுல்லவில் அமைந்துள்ள கட்டிடத்தினை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | அனுப்பப்பட்டுள்ளது. அரச கணக்குகள் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் களுக்காகவும் மதிப்பீட்டு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை வரவழைத்து இந்த பணியை துரிதப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | அமைச்சிற்கு சொந்தமாகவுள்ள நுவரெலியா மற்றும் ரக்வான ஆகிய சுற்றுலா விடுதிகள் இரண்டில் அமைந்துள்ள இரு கட்டிடங்கள் மற்றும் சட்ட வரைபு திணைக்களம் அமைந்துள்ள கட்டிடம் ஆகிய மூன்று கட்டிடங்களுக்குரிய உரித்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அமைச்சிற்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பில் உரித்தினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். | ரக்வான சுற்றுலா விடுதி 01 ஏக்கர் 01 ரூட் 10 பேர்ச் அளவான காணித்துண்டில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், 2019 யூன் 24 ஆந் திகதி இந்த காணியை கையளிக்குமாறு விண்ணப்பங்கள் கொடகவெல பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>சட்ட வரைபு கட்டிடம் மற்றும் நுவரெலியா சுற்றுலா விடுதியின் பெறுமதிகளை மதிப்பிடுவதற்காக காணிகள் தொடர்பான ஆவணங்கள் அமைச்சிடம் இல்லாதிருந்தமையால் அந்த தகவல்களை விடுவிப்பதற்காக உரிய பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | குத்தகை முறைமையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 23 மோட்டார் வாகனங்களின் மொத்த தொகை 2012 மே 27 ஆந் திகதி செலுத்தி தீர்க்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டு வரையிலும் அந்த வாகனங்களின் உரித்து கையேற்கப் பட்டிருக்கவில்லை. இவற்றுள் 22 வாகனங்களை | வாகனங்களின் உரித்து கையேற்கப்பட வேண்டும். | குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகனங்களின் உரித்தினை கையேற்கும் போது நிலவும் சிக்கலான நிலைமையை இதுவரையிம் தீர்க்க இயலாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | கைதவிர்ப்பதற்கு 2018 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டிருந்த போதிலும், உரித்து இல்லாதிருந்தமையால் அரச நிதிச் சுற்றிக்கை 02/2015 இன் 9(அ) உப பிரிவின் பிரகாரம் கைதவிர்ப்பதற்கான பரிந்துரை வழங்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே அந்த 22 வாகனங்கள் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்க முடியாதிருந்த போதிலும், முதற் பதிவானது அமைச்சின பெயரில் இல்லாதிருந்தமையால் மதிப்பீட்டுப் பெறுமதியை பெற முடியாதிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட 13 வாகனங்கள் உள்ளடங்கலான 29 வாகனங்களுக்காக உரிய முறையில் கையளிக்கப்படாது 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | உரிய முறையில் கையளிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | ஒரு டிபென்டர் வண்டியொன்று 2017 மார்ச் 08 ஆந் திகதி விபத்திற்குள்ளானமை தொடர்பில் 2017 யூன் 07 ஆந் திகதி விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் விசாரணை அறிக்கையொன்று 2018 திசெம்பர் வரையிலும் | விசாரணைகள் துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | முன்வைக்கப் பட்டிருக்காததுடன், பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டதற்கான தகவல்கள் மற்றும் வாகனம் அமைச்சிற்கு மீளப் பெற்றுக்கொள்ளப் பட்டதற்கான தகவல்கள் கண்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்கள் 16 தொடர்பில் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 நவம்பர் மாதம் வரையிலும் அதற்குரிய விசாரணை அறிக்கைகள் முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | - மேற்படி - |
| (எ) | நிலையான சொத்துக்கள் தொடர்பில் அறிக்கையிடும் போது ஒவ்வொரு வருடத்திலும் சொத்துக்களின் பௌதீக அளவானது, நிலையான சொத்துக்கள் பேரேட்டின் பிரகாரம் பெறுமதிகள் மற்றும் கட்டுப்பாட்டு கணக்கின் பிரகாரம் பெறுமதி ஆகியவை ஒப்பிடப்பட்டு அவற்றின் சரியானதன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | உரிய இணக்கங்களை சரியாக மேற்கொண்டு செம்மைத்தன்மை உறுதிப்படுத்த வேண்டும். | கணக்காய்வு ஐய வினாக்களில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு நிலையான சொத்துக்களை கணக்கு வைப்பதில் நிலவும் குறைபாடுகளினை தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். |

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சர்வதேச தீர்ப்பனவு நிலையத்தினை நிரந்தரமான இடமொன்றில் தாபிக்கும் வரையிலும் வாடகைக்கு எடுக்கப்பட்ட இடமொன்றில் நடாத்திச் செல்லப்படுகின்றமையால் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 34.85 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையம் 2016 திசெம்பர் மாதத்தின் போது பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக தாபிக்கப்பட்டுள்ள போதிலும், கம்பனிக்கு தேவையான மூலதனத்தை விநியோகித்தல் தொடர்பான தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தமை மற்றும் பணிப்பாளர் சபையொன்று மூலதனத்தை விநியோகித்தல் தொடர்பான தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்காமை மற்றும் பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்காமை போன்ற காரணங்களால் அந்த கம்பனி செயற்பாடற்று காணப்படுவதாக கோவைகளின் பிரகாரம் அவதானிக்கப்படுகின்றது.<br>இதற்கமைய, 2013 ஆம் ஆண்டு முதல் 5 ½ வருடங்கள் கடந்திருந்த போதிலும், இந்த நிலையத்தினை நிரந்தரமான இடமொன்றில் தாபிப்பதற்கு நீதி அமைச்சு தவறியுள்ளதுடன், தாபிக்கப்பட்ட கம்பனியும் செயற்பாடற்றிருந்த மையால் செலுத்தப்பட்ட ரூபா 34.85 மில்லியனான வாடகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக அவதானிக்கப்பட்டது. | இந்த நிர்வாக ரீதியான சிக்கல்களை துரிதமாக தீர்த்துக் கொள்ள பணத்தை சிக்கனத்துடன் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சர்வதேச தீர்ப்பனவு நிலையத்தினை தாபிப்பதற்கு பொருத்தமான இடமொன்றை இதுவரையிலும் கண்டறிய முடியாது போயுள்ளது என்பதனை அறிவிக்கின்றேன். இந்த கம்பனிக்கு தேவையான மூலதன மற்றும் செயற்பாட்டு சுயாதீனத்துவத்தை பெற்றுக் கொள்வதற்கு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்கு சிக்கன முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவினால் 2017 நவம்பர்29 ஆந் திகதி விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு, அந்த பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளியல் விவகார அமைச்சு மற்றும் நகரத் திட்டமிடல் அமைச்சிற்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவின் 2017 நவம்பர் 29 ஆந் திகதிய தீர்மானம் 2017 திசெம்பர் 12 ஆந் திகதிய அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த விசேட குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகள் நீதி அமைச்சினால் அமைச்சரவை குறிப்பொன்றான |

| | | |
|---|---|---|
| | | முன்வைக்கப்பட வேண்டும் என அமைச்சரவை தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையிலும் இந்த அமைச்சிற்கு அந்த பரிந்துரைகளை வழங்குதல் தொடர்பில் அறிந்திருக்கவில்லை. அதற்கமைய பிரதானமாக இந்த கம்பனிக்கு இந்த கம்பனிக்கு தேவையான நிதியேற்பாடுகளை தொடர்பான இறுதித் தீர்மானத்திற்கு வந்திருக்காமையால் பணிப்பாளர் சபை செயலற்றுக் காணப்படுகின்றதென்பதை குறிப்பிடுகின்றேன். |

**3.5 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்ட ஒரு கணக்காய்வு ஐயவினாவிற்குப், மீளாய்வாண்டிற்காக வெளியிடப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில்கள் 2019 யூலை 31 ஆந் திகதி வரையிலும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 155 மற்றும் 452(1) இன் ஏற்பாடுகளுக் கமைய எடுக்கப்படு மென்பதை குறிப்பிடுகின்றேன். | இந்த கணக்காய்வு ஐய வினாக்களுக்கு தற்போது பதில்கள் தயார்ப்படுத்தப்படுவதுடன், எதிர்காலத்தில் பதில்களை வழங்குவதற்க நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை குறிப்பிடுகின்றேன். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் 13 பதவியணியிலான வெற்றிடங்கள் 52 நிலவியதுடன், 05 பதவிகளில் | பதவியணி வெற்றிடத்தினை நிரப்புவதற்கும் | மீளாய்வாண்டின் போது 13 பதவிகளின் காணப்பட்ட வெற்றிடங்களிடையே |

| | | |
|---|---|---|
| 17 பேரின் மிகையொன்று நிலவியது. அவ்வாறே ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 05 ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை முறைமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சிரேஷ்ட மட்டத்திலான 02 வெற்றிடங்கள் 2019 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் ஆரம்ப மட்டத்திலான வெற்றிடங்களிடையே 04 சாரதிகளின் வெற்றிடங்களுக்காக அரச நிர்வாக அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளன. அதற்கமைய எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்காக ஊழியர்களை இணைத்துக் கொள்ளல் இடம்பெறவில்லை. |